82

# அகநானூற்றில் குடிவழிச் சமூகம்

முனைவர் த. கிறிஸ்டல்ரெஜி
உதவிப்பேராசிரியர். தமிழ்த்துறை,
பாரத் உயர்கல்வி (ம) ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க கால சமூகம் குடி வழிச் சமூகமாக இருந்தது.தொழில் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளும் பல்வேறு இனக்குழு மக்களும் காணப்பட்டனர் பிறப்பின் அடிப்படையில் சாதி வலியுறுத்தப்பட்டதும் மேலவர் கீழவர் என்னும் பிரிவினை மேலோங்கியதும் சாதிகளில் உட்பிரிவுகள் பெருகியதும் இதன் பிறகேயாகும். சமயம் சாதி முறையை ஏற்றுக்கொள்ளும் மனஅமைவை மக்களிடையே உருவாக்கியதுடன் சாதி மாற்ற முடியாத நிலையான அமைப்பு என நம்புமாறும் செய்தது. நிலமும் பொழுதுமே பண்டைத் தமிழரிடையே மாறுபட்ட தொழில் முறைகளைக் கொண்டு வந்ததன் அடிப்படையிலே சமூகத்தில் சாதி பிரிவுகள் உண்டாயின.

முன்னுரை

பண்டைய தமிழ் சமூகம் அடிப்படையில் ஒரு குடிமுறை அமைப்பாகும். சுhதி முறை சமூகத்தின் குறிப்பிடத்தக்க ஒரு அங்கமாகக் காணப்பட்டது. சாதி கடவுளால் படைக்கப்பட்டது என்னும் கோட்பாடு வலிமைப் பெற்ற பிறகு தான் சாதி முறை சமுதாயம் அங்கீகாரத்தைப் பெற்று எவ்வித மறுப்பும் இன்றி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிறப்பின்அடிப்படையில் சாதி வலியுறுத்தப்பட்டதும் மேலவர் கீழவர் என்னும் பிரிவினை மேலோங்கியதும் சாதிகளில் உட்பிரிவுகள் பெருகியதும் இதன் பிறகேயாகும். இவ்வாறு சமயம் சாதிமுறையை ஏற்றுக்கொள்ளும் மனஅமைவை மக்களிடையே உருவாக்கியதுடன் சாதி மாற்ற முடியாத நிலையான அமைப்பு என நம்புமாறும் செய்தது தொழில்களின் அடிப்படையிலேயே சாதி என்ற பிரிவுகள் காணப்பட்டுள்ளன.நிலமும் பொழுதுமே பண்டைத் தமிழரிடையே மாறுபட்ட தொழில் முறைகளைக் கொண்டு வந்தது.அதன் அடிப்படையிலே சமூகத்தில் சாதி பிரிவுகள் உண்டாயின.

வேடர்கள்

சங்க கால வேடர்கள் மலை காட்டுப்பகுதிகளில் சிற்றூர்களில் தங்கள் தொழிலுக்கு ஏதுவான இடங்களில் குடிசைகளில் வாழ்ந்தனர். “வேடர்கள் என்ற சொல் வேட்டையை வாழ்வாதாரமாகக் கொண்டோரைக் குறிக்கும் பொதுச்சொல்(பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும் ப.123) . வேடர் என்போர் வேட்டையாடுவோர். அவர்கள் கொலைக்கு அஞ்சாத வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுமாவர். அவர்கள் ஆநிரைகளைத் திருடுவர். வுழிப்போக்கர்களிடமிருந்து உடைமைகளைப் பறித்து அவர்களது துன்பங்களைக் கண்டு மகிழ்வர்(சுப்பிரமணியன்,ப.336, 1986) என்று வேடர்களைப் பற்றி சங்க கால வாழ்வியல் நூல் குறிப்பிடுகின்றது.

அகநானூற்றுப் பாடல்களில் பல்வேறுப் பெயர்களால் வேடர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

வீளை அம்பின் விழுத்தொடை மழவர்” ( அகம். 131;:6)

கானவர் மடிந்த கங்குல்”(அகம்.168:13)



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

வில்லோர் குறும்பில் ததும்பும்"(அகம்.261:14)

கடிபுலம் கவர்ந்த கன்றுடை கொள்ளையர்"(அகம்.101:10)

என்ற பாடல் வரிகளில் மழவர், கானவர், வில்லோர், கொள்ளையர் எனப் பல பெயர்களால் வேடர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது. வளைந்த வில்லையுடைய மறவர்கள் எல்லையில் செல்வோரை அலறும் படி செய்து அவர்களின் பொருட்;களை வழிப்பறிச் செய்ததை

---------------------இருஞ்சிறை

வுளை வாய்ப் பருந்தின் வான் கட்பேடை

ஆடு தொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடிக்

கொடு வில் எயினர்"(அகம்.79:11-14)

இப்பாடல் சுட்டிக்காட்டுகின்றது. கல்வி அறிவில்லாத மழவர்கள் சுருண்டு வளைத்த தலை மயிரினையுடையவர்களாய் வில்லினை தமது இடப்பக்கத்தில் தழுவிக் கொண்டு வழிப்பறி செய்யும் பொருட்டு வழி போவாரை எதிர் பார்த்திருப்பர்; என்ற செய்தியை,

கல்லார் மழவர் வில் இடம் தழீஇ

வருநாப் பார்க்கும் வெருவரு கவலை

மொழி பெயர் தேஎத்தர்"(அகம்.127:15-17)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

மறவர்கள்

"பாலை நில மறவர் தமக்காக குடும்பத்திற்காக வாழ்பவர்.பாலை நில மறவர் பிறரை வதைப்பதிலும் தம்மைக் காப்பதிலும் கருத்துடையவர்(சங்ககால மறவர்,ப.29,1998) என்று அ. முத்தையா குறிப்பிடுகின்றார் .அன்பில்லாத வாழ்க்கையை உடைய வன்மையான வில்லையுடையவர் மறவர் என்பதை

செல்சாத்து எறியும் பண்புஇல் வாழ்க்கை

வல்வில் இளையர் தலைவர்"(அகம்.245:6-7)

இவ்வரிகள் கூறுகின்றன. உயிர்களை கொல்லுவதில் அதாவது தம்முடைய அம்பு விடுதலின் சிறப்பைக் காணும் பொருட்டு புதியவர்களைக் கொன்றும் பறவைகளுக்கு கொடுப்பதில் ஊக்கமுடையவர்கள் என்பதை

அம்பு தொடை யமைதி காண்மார் வம்பலர்

கலனிலர் ஆயினும் கொன்று புள்;ட்டுங்

கல்லா இளையர்"(அகம்.375:3-5)

இப்பாடலடிகள் பறைச ;சாற்றுகின்றன.பார்ப்பான் கையில் பொன் இருப்பதாகக் கருதி அவனைக் கொன்று அவன் வறியவன் என்று கண்டு கை நொடித்து புறம் சென்றதை

உண்ண மருங்கில் அன்னோன் கையது

பொன்னாகுதலும் உண்டு எனக்கொன்னே

தடிந்து உடன் வீழ்த்த கடுங்கன் மறவர்

நிறன் இல் சிதாஅர் வறுமை நோக்கி

செங்கோல் அம்பின கைநொடியால் பெயர (;அகம் 337: 9-13)



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இப்பாடல் பதிவு செய்துள்ளது.பாலை நிலமறவர்கள் எத்தகைய கொடுமையாவர்கள் என்பதை இச் செயல் மூலம் அறிந்து கொள்ளலாம். பாலை நிலமறவர்கள் அச்சத்தை தரும் கண்ணியைத் தலையில் சூடியவர்கள் . வழிப்போக்கர்களின் பொருள்களைபு; பறித்துக்கொள்பவர் என அவர்களின் தோற்றத்ததையும் செயலினையும்

உவலை சூடிய தலையர் கவலை
ஆர்த்துடன் அரும் பொருள் வல்வழின் யாவதும்; (;அகம் 291: 13-14)

இப்பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன .அச்சம் தரும்காட்டில் வழியில் வருபவரின் இயல்பை அறிய வில்லில் வன்மையான ஆறலை கள்வர்கள் மரத்தின் உச்சியில் மறைந்து இருப்பதை

ஆறுசெல் வம்பலர் வருதிறம் காண்மார்
வில்வல் ஆடவர் மேல் ஆள் ஒற்றி"(அகம்.263:6-7)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.மறவர்கள் தங்கள் காட்டு அரண்களில் தண்ணுமை பறையினை பயன்படுத்தியதை

கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி
அருஞ்சுரம் செல்வோர் செஞ்சம் துண்ணென"(அகம்:87:7-9)

இப்பாடல் குறிப்பிடுகின்றது.

கானக்குறவர்

"கானக்குறவர்கள் கிழங்கு, தேன்எடுத்தல், பலாமரங்களை வளர்த்தல் என்ற நீதியில் மலைச்சாரல்களில் புனங்களை உண்டாக்கி தினை, ஐவனம் ஆகியவற்றைப் பயிரிடும் வாழ்க்கை முறையில் நிலைப்பெற்றார்கள்" (பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும் ப.133) என ராஜ்கௌதமன் குறிப்பிடுகின்றார்;. மூங்கிலால் ஆன வில்லை தோளில் இட்டு விலங்குகளைத் தப்பாமல் பற்றும் வலிய நாய் பின்வர வேட்டைக்கு சென்ற குறவன் என்பதை,

வீளை அம்பின் இளையரொடு மாந்தி
ஓட்டு இயல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட"(அகம்.182:4-6)

என்ற பாடல் வழி அறியலாம். யானையின் வெண்கொம்புகளை எடுப்பதற்காக கானவர் யானைகள் இயங்கும் வழியில் குழி தோண்டி வைத்திருப்பர் என்பதை

வெண்கோடு நயந்த அன்பு இல் கானவர்
இகழ்ந்து இயங்கு இயவின் அகழ்ந்த குழிசெத்து
இருங்களிற்று இனநிரை தூர்க்கும்"(அகம்.21:24-26)

இப்பாடல் அடிகள் தெளிவுப்படுத்துகின்றன. மலையில் வாழ்கின்ற கானக் குறவர் தாம் புனங்களை காவல் செய்வதுப் போல புனங்களைப் பாதுகாக்க தங்களின் பருவ மகளீரை அனுப்புதலை வழக்கமாகக்கொண்டீருந்தனர்; மணமாகாத இளம் பெண்கள் சிற்றூரின் ஓசையிலிருந்தும் ஆரவாரத்திலிருந்தும் ஒதுங்கியுள்ள தினைப் புனங்களைக் காவல் செய்வர். தினையின் நீண்ட கதிர்களை வளையல் அணிந்திருக்கும் கைகளையுடைய மகளீர் காவல் செய்ததை

தோடுவளர் பைந்தினை நீடுகுரல் காக்கும்


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

ஓண்டொடி மகளிர்"(அகம்.368:3-4)

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

உழவர்கள்

கால்நடை சாhந்த வாழ்க்கை ஒருபுறம் இருக்க வன்புலங்களில் செம்மண் நிலங்களில் கொல்லை நிலங்களில் மழையை நம்பிய வரகு, அவரை, எள், கொள் பயிறு விவசாயத்தை மேற்கொண்ட மற்றொரு வாழ்க்கையும் இயங்கிக் கொண்டிருந்தது. உழவர் சமவெளியில் வாழ்ந்தனர்;. வுறளை நிலங்களிலிருந்து உணவு பொருட்களை விளைவித்தல் அவர்கள் தொழில்" (சங்க கால வாழ்வியல்,ப.336,1986)என்று ந.சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

பசிய பள்ளங்களில் நீரைத் தேக்கி உழவர் நெற்பயிரினை நட்டனர்.தங்கள் உழைப்பின் களைப்பு வெளியே தெரியாத வண்ணம் கள்ளை உண்டு மகிழ்ச்சியோடு உழவுத் தொழிலை செய்தனர் என்பதை

கள்ளார் உவகைக் கலிமகிழ உழவர்

-----------------------------------------------------------------

வருந்திக் கொண்ட வல்வாய் கொடுஞ்சிறை"(அகம்.346:5-9)

என்ற பாடல் மூலம் அறியலாம். உழவர்கள் நெல் பயிரிட்டதைப் போன்று கரும்பையும் பயிருட்டுள்ளனர்.பசுக்கள் நெற்கதிர்களை உண்பதைக் கண்டு அதற்கு கரும்பினை உண்ணுமாறு செய்த செயலினை,

செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக் கதிர்

மூதா தின்றல் அஞ்சிக் காவலர்

----------------------------------------------------------------------

காஞ்சியின் அகத்துக் கரும்பு அருந்தியாக்கும்"(அகம்.156:3-6)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

ஆயர்குடி

"ஆயர்களில் ஆட்டுக்கிடைகளை மேய்த்தவர் 'புல்லினத்து ஆயர்' எனவும் 'குறும்பர் எனவும் கூறப்பட்டனர்.ஆயர் 'பொதுவர்' என்றும் 'கோவலர்' என்றும் கூறப் பெறுவர்" (சங்க இலக்கிய கொள்கை,ப.254,2008)என்று கு.வெ. பால சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

ஆயர்குடி இனத்தை சார்ந்த மக்களின் தோற்றம் குறித்து, இடையன் செம்மறியாட்டுக் கூட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டு கையில் கோலை ஏந்தி தோளில் பானையையும் உறியையும் கொண்டவன். தோல் படுக்கையைக் கொண்டவன் .தன் வாயை மடித்து சீழ்க்கை ஒலி எழுப்பி தன் மந்தையைக் கண்காணிக்க ;கூடியவன் என்பதனை,

ஆடுதலைத் துருவின் தோடு ஏமார்ப்பக்

கடைக்கோல் சிறுநீ அடைய மாட்டி

திண்கால் உறியன் பனையன் அதளன்

நுண்பல் துவலை ஒரு நிறம் நனைப்ப

தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்"(அகம்.274:4-8)

இப்பாடல் வரிகளில் காணலாம். ஆயர் குடி இன மக்கள் தங்கள் பசுக்கூட்டங்களுக்கு நீர் உண்பிக்க கேணியைத் தோண்டுவர் என்பதனை,

பயநிரை சேர்ந்த பாண் நாட்டு ஆங்கண்

நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய"(அகம்.155:7-8)

என்ற பாடலடிகளில் காணலாம். ஆயர்கள் உழவர் இன மக்களைப் போன்று உழவுத்தொழிலும் செய்வர்.மழை பெய்த காலங்களில் ஏர் பூட்டி நிலத்தை உழுது விதை விதைப்பர். இவ்வாறு விதைக்கப்பட்ட விதைகள் முளைத்தன என்பதனை,

ஏரிடம் படுத்த இருமறுப்பூழிப்

புறமாறு பெற்ற பூவல் ஈரத்து

ஊன்கிழித்தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்

வுpத்திய மருங்கின் விதைப் பல நாறி"(அகம்.194:2-5)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. ஆயர் தயிர் கடைவதை ,

தீம் தயிர் கடைந்த திரள்கால் மத்தம்"(அகம்.87:1)

இப்பாடல் வரி வழி அறியலாம். ஆயர் கூழ் உணவினை உண்டதை,

------------------------கூழ் ஆர் கோவலர்"(அகம்.21:22)

இப்பாடல் வரி குறிப்பிடுகின்றது. ஆயர்கள் புல்லாங்குழல் வாசிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர் என்பதற்கு பல பாடல்கள் சான்றாகின்றன.

ஆபெயர் கோவலர் ஆம்பலோடு அளைஇப்

பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப"(அகம்.214:12-13)

அழல் எறி கோடை தூக்கலின் கோவலர்

குழல் என நினையும் நீர்இல் நீள்இடை"(அகம்.219:15-16)

**பரதவர் குடி**

மீன் பிடிக்கும் குடியினரை மீனவர், வலைஞர் அல்லது வலைப்பரதவர் என்றனர். "பரதவர் , மீனவர் என்போர் மீன் பிடிப்பவர்கள். அவர்களுக்கு வலையர் என்பதும் பெயர் .அவர்கள் திமில் என்னும் சிறு படகுகளை வைத்திருப்பர். அவர்கள் சுறுசுறுப்பாக மீன் வியாபாரம் செய்தனர். அவர்கள் கடற்கரையோரமாக வசித்தனர்(சங்க கால வாழ்வியல் ப.369. 1986) என்று ந.சுப்பிரமணியன் பரதவர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்;. பரதவர் மீன் பிடிக்க தோணி திமில் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி வலைவீசியதை ,

கடல்படு அவிந்து தோணி நீங்கி

நெடுதீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்"(அகம்.50:1-2)

என்றும், படகைப் பயன்படுத்தி மீன் பிடிக்க சென்ற பரதவர்கள் பல்வேறு வகையான மீன்களைப் பிடித்ததை ,

கொழுமீன் கொள்பவர் இருள் நீங்கு ஒண்சுடர்(அகம்.100:7)

கொடுந்தாள் முதலையொடு கோட்டு மீன்

இருங்களியிட்டு சுரம் நீந்தி"(அகம்.80:1-2)

முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும்"(அகம்.220:17)



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இப்பாடல் வரிகள் வழி அறியலாம். பிடித்த மீன்களைப் பரதவர்கள் விற்பனைச் செய்தனர்.தன்னுடைய தமையன் வலையை வீசி படகில் பிடித்து வந்த மீனை அவர்களது தங்கைமார் தெருக்களில் விலை கூறி விற்றதை,

ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇத்
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்
தழையணி அல்குற் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகரும்"(அகம்.320:1-4)

என்ற இப்பாடல் புலப்படுத்துகின்றது. மீன் பிடிக்கும் தொழிலையுடைய பரதவ மக்கள் பெரிய உப்பங்களியாகிய வயலிலே கல் உப்பினை உழாமலேயே விளைவிப்பர். அதனை உப்பு வணிகர்கள் விலை கொடுத்து வாங்குவர். இதனை,

பெருங்கடல் வேட்டத்து சிறுகுடிப் பரதர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி"(அகம்.140:1-3)

இப்பாடலடிகள் பதிவுச் செய்துள்ளன. தாங்கள் பிடித்த மீன்களை விற்று பின்பு எஞ்சி இருந்தவற்றைப் பரதவர்கள் உலர்த்தினர் என்பதை,

பெருநீர் அழுவத்து எந்தை தந்த
கொழுமீன் உணங்கற் படுபுள் ஒப்பி"(அகம்.20:1-2)

என்ற பாடல் வழி அறியலாம். பரதவர் இனக்குழு மரபினர் மீன் பிடித்தல், விற்றல். உலர்த்துதல். தவிர கடலில் மூழ்கி முத்தெடுத்தல் தொழிலையும் செய்தனர்;.சுறா மீனை ஒதுக்கி கடலில் மூழ்கி வலம்புரியின் முத்தைப் பரதவர்கள் எடுத்து வந்ததை,

இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வுலம்புரி மூழ்கியவான்றி மிற் பரதவர்
ஓலி தலைப் பணிபுலம் ஆர்ப்பக் கல்லென"(அகம்.350:10-12)

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உமணர் குடி**

உப்பு தயாரித்து விற்பவர்கள் உமணர். சங்க காலத்தில் இடம் விட்டு இடம் பெயர்ந்து ஊர் ஊராகத் திரிந்து உப்பு வாணிபம் செய்த ஒரே குடியாக உமணர் குடி காணப்படுகின்றது. ஊமணரின் வணிகம் உமண் சாத்து எனப்பட்டது(பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும் ப.155) என்று ராஜ்கௌதமன் குறிப்பிட்டுள்ளார்.

உமணர்கள் உப்பங்கழியில் பரதவர் உண்டாக்கிய உப்பை தங்கள் மாட்டு வண்டிகளில் ஏற்றிச் செல்வர். காட்டு வழிப் பாதைகளில் உமணர்கள் கடந்து சென்ற போது ஆங்காங்கே பெருங்கூட்டமாக தங்கினார்கள்.தங்கும் இடங்களில் கற்களை அடுப்பாக்கி சமைத்து உண்டதனை,

நெறி அயல் திரங்கும் அத்தம் வெறிகொள
ஊமண் சாத்து இறந்த ஒழிகல்அடுப்பில்"(அகம்.119:7-8)

இப்பாடல் வரிகளில் காண முடிகின்றது. உமணர்கள் உப்பினை விற்பனைச் செய்ய புறப்படும் போது பறவைகளின் நிமித்தத்தைப் பார்த்ததை,

குடபுல மருங்கின் உய்ம்மார் புள் ஓர்த்து”(அகம்.207:3)

இப்பாடல் வரி குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

சங்க கால சமூகம் குடி வழிச் சமூகமாக இருந்தது.தொழில் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளும் பல்வேறு இனக்குழு மக்களும் காணப்பட்டனர்;. வேட்டைத் தொழில் புரிவோர் வேடர்கள் என்பதையும் கானக்குறவர் மலைவாழ் குடியினர் என்பதையும் கண்டுக்கொள்ள முடிகிறது.உழவர் சமூகத்தில் முக்கியமானவர்கள் வேளாளர்கள் எனப்பட்டனர்.பராவர் நெய்தல் நிலத்தில் தொழில் புரிவோர். இவர்கள் வலைஞர் என்றும் அழைக்கப்பட்டனர். உமணர் என்போர் உப்பு வணிகம் செய்யக் கூடியவர்கள். இவர்கள் வண்டிகில் உப்பை ஏற்றிச் சென்று உப்பை விற்று நெல்லைப் பெற்றனர் என்பதையும் அகநானூற்றுப் பாடல்கள் வழி அறிந்துக் கொள்ள முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1.ராஜ்கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும் , காவ்யா பதிப்பகம்

2. சுப்பிரமணியன். சுங்க கால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்

3.முத்தையா.சு. சங்ககால மறவர் ,காவ்யா பதிப்பகம்.

4. கு.வெ. பால சுப்பிரமணியன் , சங்க இலக்கிய கொள்கை, மீனாட்சி புத்தக நிலையம்.அகநானூற்றில் குடிவழிச் சமூகம்